செ.வெ.எண்: 44 நாள்: 22.01.2020

**தஞ்சையில் நடந்த பயிற்சி முகாமில் வெளிநாட்டு வேலைக்கு செல்லும் தொழிலாளர்கள் கடைபிடிக்க வேண்டியவை குறித்து எடுத்துரைக்கப்பட்டது.**

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம் வல்லத்தில் உள்ள பெரியார் நூற்றாண்டு பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் தஞ்சாவூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 21.01.2020 அன்று அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம் சார்பில் புலம்பெயரும் தொழிலாளர்களின் பயண முன்னேற்பாட்டிற்கான முதன்மை பயிற்சி முகாம் நடைபெற்றது. தனியார் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்பட்ட இப்பயிற்சிமுகாமிற்கு திரு. த.முருகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) அவர்கள் தலைமை தாங்கினார். வட்டாட்சியர் திரு.க.இரத்தினவேல் முன்னிலை வகித்தார். இப்பயிற்சி முகாமில் சட்டப்படியான ஆவணங்கள், வேலைக்கான விசாவுடன் முறையாக வெளிநாடு செல்ல வேண்டும். அனைத்து ஆவணங்களின் நகல்களையும் குடும்பத்தினர் தன்வசம் கூடுதலாக வைத்திருக்க வேண்டும். வேலைக்கு செல்லும் நாட்டின் உள்நாட்டு சட்ட திட்டங்கள் கலாச்சாரங்களை மதித்து நடக்க வேண்டும், வெளிநாடுகளில் பணிபுரியும் இடங்களில் இருந்து வெளிசெல் விசா பெற்றிடாமல் நாடு திரும்பமுடியாது. வேலைக்கான ஒப்பந்தத்தையும் அதன் நகலையும் எப்போதுமே கைவசம் வைத்திருக்க வேண்டும். வெளிநாடுகளில் பிரச்சனை ஏற்பட்டால் உடனடியாக இந்திய தூதரகத்தை அணுக வேண்டும். வேலைக்கு செல்லும் நாட்டில் உள்ள இந்திய தூதரகங்களின் முகவரி, தொலைபேசி எண்களை கைவசம் வைத்திருக்க வேண்டும். வெளிநாடுகளில் பேராட்டம் நடத்தவோ, சங்கம் அமைப்பதோ கூடாது. மதுவகைகள் போதைப் பொருட்கள், கடத்தல் பொருட்கள் போன்றவற்றை கொண்டு செல்லக்கூடாது என அறிவுறுத்தப்பட்டது. மேலும் வெளிநாடுகளில் சட்டத்திற்கு புறம்பாக நுழைபவர்கள், சட்டத்திற்கு விரோதமாக செயல்படுபவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனைகள், தாய்நாட்டிற்கு பணம் அனுப்பும் முறையான ஆவணங்களை வைத்திருக்க வேண்டியதன் அவசியம் உள்ளிட்டவை குறித்து எடுத்துரைக்கப்பட்டது. இதில் கல்லலூரி மாணவ மாணவியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.